பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

## காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID காப்புறுதி பத்திரம்

## கம்பீர கடை பாதுகாப்பு காப்புறுதி பத்திரம்

### 1. காப்பீட்டு விடயதானம்

கம்பீர கடை பாதுகாப்பு காப்புறுதி பத்திரமானது, உங்களுடைய வியாபாரத்துக்கு விரிவான பாதுகாப்பு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட பூரண காப்புறுதிப் பொதியொன்றாகும். அது பல்வகைப்பட்ட காப்புறுதிக் காப்பீடுளை ஒரே தனி காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் ஒன்றிணைத்து, உங்களது வர்த்தக ஆதனங்களையும் மற்றும் சட்ட பூர்வ பொறுப்புக்களை பாதுகாப்பதற்கு துணை புரிவதோடு, பெறுமதியான தனிப்பட்ட பயன்பாடுகளையும் வழங்குகின்றது.

### 2. எதனைக் காப்பீடு செய்கின்றது (தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டது)?

இக்காப்புறுதப் பத்திரமானது, பல துறைகளை காப்பீடு செய்யும் பொதியொன்றாகும். உங்களது காப்புறுதி அட்டவணையில் செயல்பாடானவை என குறித்துரைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மட்டுமே நீங்கள் காப்பீடு செய்யப்படுகின்றீர்கள்.

**(i) ஆதனம் – பகுதி 1**

தீ மற்றும் மின்னல், வெடித்தல், சூறாவளி, புயல், வெள்ளம், நிலநடுக்கம், தண்ணீர் தாங்கிகளில் தண்ணீர் வெளியேற்றம் உட்பட காப்புறுதி செய்யப்பட்ட ஆபத்துகளினால் கட்டிடம், உள்ளடக்கங்கள் மற்றும் கையிறுப்பு என்பவற்றுக்கு ஏற்படும் பௌதீக இழப்பு, சேதத்தில் இருந்தும் காப்பீடு வழங்குகின்றது. வளாகத்தில் பலாத்கார உட்புகுதல் அல்லது வெளிச் செல்லல் சம்பந்தப்பட்ட வீடுடைப்பையும் அது காப்பீடு செய்கின்றது.

அத்துடன், மாற்று தங்குமிடம், பூட்டுக்களை மாற்றீடு செய்தல் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட கையிருப்பின் பெறுமதியில் பண்டிகைக் காலங்களின் போது பருவ கால அதிகரிப்பு போன்ற சுய செயற்பாடான பயன்பாடுகளையும் இக்காப்புறுதிப் பத்திரம் உள்ளடக்குகின்றது.

**(ii) கொண்டு செல்லப்படும் பண்டங்கள் – பகுதி 2**

கையிருப்பு கொண்டு செல்லப்படும் போது, மோதல், தீ போன்ற காப்புறுதி செய்யப்பட்ட சம்பவங்களினால் விளையும் இழப்பு, சேதத்தில் இருந்தும் உங்களது கையிருப்புக்கு காப்பீடு வழங்குகின்றது.

**(iii) பணம் – பகுதி 3**

வளாகத்தில் பூட்டுப் போடப்பட்ட காப்பகத்தில் இருந்தும் மற்றும் வங்கிக்கும் வங்கியிலிருந்தும் எடுத்துச் செல்லும் போது வியாபாரப் பணம் காணாமற் போதலினால் ஏற்படும் இழப்புக்கும் இக்காப்புறுதிப் பத்திரம் காப்பீடு வழங்குகின்றது. வேலையாட்களின் நேர்மையீனத்தினால் ஏற்படும் இழப்புகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட மட்டத்திலான காப்பீட்டை இது உள்ளடக்குகின்றது.

**(iv) வேலையாட்களின் நட்டஈடு – பகுதி 4**

அவர்களுடைய வேலையின் போதும் அதனாலும் எதேச்சையான காயம், சுகயீனம் அல்லது நோய்க்கு இலக்காகும் வேலையாட்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கான சட்டபூர்வ பொறுப்புக்கு இக்காப்புறுதிப் பத்திரம் காப்பீடு செய்கின்றது.

**(v) பொது மக்கள் பொறுப் – பகுதி 5**

உங்களது கடையில் வைத்து வாடிக்கையாளர் போன்ற, மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் உடற் காயத்தினாலும் மற்றும் அவர்களது சொத்துக்களுக்கு ஏற்படும் இழப்பு, சேதத்தினால் விளையும் சட்டபூர்வ பொறுப்புக்கு இக்காப்புறுதிப் பத்திரம் காப்பீடு வழங்குகின்றது. இக்காப்புறுதிப் பத்திரமானது, மருந்தாளுனர்களுக்கும் ஏற்றுதல், இறக்குதல் செயற்பாடுகளின் போது ஏற்படும் பொறுப்புக்களுக்கும் விசேட வியாபகங்களையும் உள்ளடக்குகின்றது.

**(vi) தனி நபர் விபத்தும் மருத்துவமனை பணமும் – பகுதி 6 & 7**

விபத்தொன்றினால் ஏற்படும் எதேச்சையான மரணம் அல்லது நிரந்தர ஊனத்துக்கு பணத் தொகையொன்றை வழங்குவதுடன், விபத்தினால் ஏற்படும் மருத்துவமனையில் தங்கியிருப்பதற்கு தினசரி பணக் கொடுப்பனவொன்றையும் வழங்குகின்றது. உங்கள் கடையில் இருக்கும் போது உங்களுக்கும், உங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கும், உங்கள் வேலையாட்களுக்கும் இந்தக் காப்பீட்டை விஸ்தரிக்கலாம்.

,

**3. காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**

- கிரமமான சிதைவு, தேய்மானம் மற்றும் சாதாரண மதப்பிறக்கம் என்பவற்றினால் விளையும் இழப்பு அல்லது சேதம்.
- மின்னியல் உபகரண பகுதியின் கீழ் மின்னியல் உபகரண களவு. பிரயோகத்தக்க காப்புறுதிப் பத்திர நியதி, நிபந்னைதனைகளுக்குட்பட்டு, பலாத்கார, வன்முறை உட்புகுதலினால் ஏற்படும் களவு சொத்து பகுதியின் கீழ் காப்பீடு செய்யப்படலாம்.

- மின்னியல் உபகரணங்களில் சேமிக்கப்பட்டுள்ள மென்பொருட்கள், செயல் திட்டங்கள் அல்லது தரவுகளின் இழப்பு அல்லது சேதம்.
- பற்றுறுதி உத்தரவாத பகுதி உள்ளடக்கப்படா விடத்து வேலையாட்களின் நேர்மையீனத்தினால் ஏற்படும் இழப்புக்கள்.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

இதே ஆதனத்தை காப்பீடு செய்யும் வேறேதும் காப்புறுதிப் பத்திரங்களின் விபரங்கள் உட்பட, வியாபாரம் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட ஆதனங்களின் உண்மையானதும் பூரணமானதுமான தகவல்களை வழங்கப்பட வேண்டும்.

காப்புறுதி செய்யப்பட்ட சொத்து நன்னிலையின் பேணப்பட வேண்டும். பூட்டுக்கள் போன்ற உசிதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். இழப்பையும் சேதத்தையும் தவிர்ப்பதற்காக நியாயமாக எல்லா முன்னெச்சரிக்கை செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

வியாபார நடவடிக்கைகளில் மாற்றங்கள் அல்லது வளாகம் தொடர்ச்சியாக 30 நாட்களுக்கு மேல் காலியாக இருத்தல் ஆகியன உட்பட ஆபத்தை அதிகரிக்கத் தக்க முக்கிய மாற்றங்கள் பற்றி உடனடியாக பயார்பஸ்ட் இன்சூரன்ஸுக்கு அறிவிக்க வேண்டும்.

கோரிக்கை முன்வைக்கத் தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட ஆதனத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். எம்முடனும், கோரிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டாளர்கள், இழப்பு இயைபாக்குனர்கள் அல்லது விசாரணையாளர்களுடனும் முழு ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏதும் இழப்பு, சேத சம்பவத்தின் 14 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கை படிவத்துடன் உடனடியாக பயார்பஸ்ட்டுக்கு அறிவிக்க வேண்டும். சேதத்தின் புகைப்படம், திருத்த மதிப்பீடுகள் மற்றும் பாதிக்கப்பட்ட அம்சங்களின் உரித்துரிமை பற்றிய சான்றுகள் உட்பட சம்பந்தப்பட்ட ஆதார ஆவணங்கள் யாவும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎ +94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

**7. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

**8. வேறு தகவல்கள்**

- ஆதனமானது அதன் முழுப் பெறுமதிக்கும் காப்புறுதி செய்யப்பட வேண்டும். இழப்பொன்று நிகழும் போது, காப்புறுதி தொகையானது, காப்புறுதி செய்யப்பட்ட ஆதனத்தின் உண்மைப் பெறுமதியிலும் குறைந்ததாயின், கோரிக்கை செலுத்துகையானது விகிதாசாரமாக குறைக்கப்படும்.
- காப்புறுதி அட்டவணையில் "செயற்பாடானது" எனக் குறிப்பாக பட்டியலிடப்பட்டுள்ள பகுதிகளுக்கு மட்டுமே காப்பீடு வழங்கப்பட்டுள்ளது.
- காப்புறுதி செய்யப்பட்ட நபர் 65 வயதை அடையும் போது, பகுதி 6 இன் கீழான தனி நபர் விபத்து காப்பீடு முடிவுறும்.

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.